**கல்கமுவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 15 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கல்கமுவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 4,000,000 தொகையான ''பொப்கெட்'' இயந்திரத்தின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,390,345 தொகை நீண்ட கால பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டுக்கடன் அபிவிருத்தி நிதியத்தின் வீதி அபிவிருத்தி செயற்திட்டம், நூலகம் மற்றும் சுகாதார நிலையங்களுக்காகப் பெறப்பட்ட கடன்களுக்காக முன்னைய வருடத்திற்குரிய வட்டி ரூபா 365,584 நடப்பாண்டின் வட்டியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 526,351 தொகையான வட்டி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) சுடலைக்கூடத்தை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடனுக்காக நடப்பாண்டின் ரூபா 584,234 தொகையான வட்டி நிதிக்கூற்றுக்களில் ரூபா 586,123 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) JCB இயற்திரத்தை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்க வேண்டிய ரூபா 217,913 தொகையான மீதி மற்றும் மோட்டார் கிறேடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்க வேண்டிய ரூபா 249,056 தொகையான மீதி என்பன நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) எதிர்வரும் வருடங்களுக்காக முற்பணமாகக் கிடைக்க ஆதனவரி ரூபா 36,750 தொகை மற்றும் பெறவேண்டிய ஆதனவரி ரூபா 239,806 தொகை என்பன நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்கள் / சொத்துக்களாக வெவ்வேறாக வெளிப்படுத்தாமல் சீராக்கமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) வருமானப் பிரிவில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் விளம்பர அறிவித்தல் பதாதை வருமானம் ரூபா 308,950 ஆக இருந்த போதிலும், அது வருமான செலவினக் கணக்கில் ரூபா 130,430 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 103,950 தொகையான நிலுவை வருமானம் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நிலுவை கடை வாடகை ரூபா 838,349 தொகை மற்றும் முற்பணமாகக் கிடைத்த கடை வாடகை ரூபா 35,654 என்பன நிதி நிலைமைக் கூற்றில் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 54,000 தொகையான பரிவர்த்தனைக் கோபுர வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) பிரதேச செயலகம் மற்றும் மஹாவலி அதிகாரசபை போன்ற நிறுவனங்களின் மூலம் முறையே 20 மற்றும் 13 ஆக சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த மயான நிலங்களினதும், கலஜ்ஜகம றுக்அத்தனயாகம காணி போன்ற காணிகளினதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(க) 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 115,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட மின்சார நீர்ப்பம்பி நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,015,000 ஆகப் பதியப்பட்டிருந்தது.

(கா) கல்கமுவ பொதுச் சந்தை மற்றும் பேரூந்து நிலையம் என்பவற்றின் கடைகளுக்குரிய கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 205,635 தொகையான நிலுவை மின்சாரக் கட்டணம் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மோட்டார் கிறேடர் கடன்பட்டோர் பதிவேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளுக்கும் இடையே ரூபா 177,148 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் வாடகை சிட்டையிடலின் பெறுமதி திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வாடகைப் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 12,808 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற நானாவித வைப்புக்கள், நானாவித கடன்கொடுத்தோர் மற்றும் பொது வழங்கல் மீதிகளை பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 2,112,870 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) சுகாதார சேவைகளுக்கான மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினம், பேரேட்டின் பிரகாரம் ரூபா 335,245 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவினக் கணக்கில் அது ரூபா 3,352,245 ஆகக் காணப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் மீளளிப்புச் செய்யவேண்டிய ரூபா 17,264,399 தொகையான சம்பளம் ரூபா 17,154,043 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. நடப்பாண்டிற்குரியதாக மீளளிப்புச் செய்ய வேண்டிய சம்பளம் உரிய பதிவேட்டின் பிரகாரம், ரூபா 52,332,675 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 50,454,794 ஆக இருந்தது.

(ஊ) நலன்புரி சேவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும், பேரேட்டின் பிரகாரம் ரூபா 23,154 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 231,154 ஆக இருந்தது.

(எ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நீர் சேவைக் கட்டணம் ரூபா 47,038 ஆக இருந்ததுடன் பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் அம்மீதி ரூபா 67,038 ஆக இருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 70,779,071 தொகையான கடன்பட்டோர் மீதியில் ரூபா 13,575,585 தொகை 1-5 வருடங்களுக்கும், 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திற்குரியதாக இருந்தது. அதில் ரூபா 57,203,486 தொகையான கடன்பட்டோர் மீதிக்கான காலப் பகுப்பாய்வும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

i. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 87,354,339 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 79,741,206 தொகை தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான கால வீச்சில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 265 மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள ரூபா 2,862,974 தொகையிலிருந்து மீளச் செலுத்த முடியுமான வைப்புக்களை இனங்கண்டு மீளச் செலுத்துவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. நீண்ட காலமாக உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,112,420 தொகையைச் செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 20,499,766 கூட்டுப்பெறுமதியான 06 கணக்கு விடயங்களுக்கான ஏடுகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த விடயங்கள் தொடர்பாக விரிவாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| 371(2) | ரூபா 74,000 தொகையான செயல்நிதித்த கட்டுநிதி 01 இற்கும் 05 மாதங்களுக்கும் இடையிலான காலம் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ஆ) திறைசேரிச் செயலாளரின் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி, துணைப் பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பிரத்தியேக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,022,434 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,557,272 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 14,465,162 தொகையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

வாடகை, பிடியாணைக்கட்டணம், தண்டப்பணம் மற்றும் ஏனைய வருமானங்கள் முறையே ரூபா 8,906,070 தொகை, ரூபா 4,772,060 தொகை மற்றும் ரூபா 8,934,883 தொகையினால் அதிகரித்தமை நிதி விளைவின் அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் ரூபா 140 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 105 மில்லியன் வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 09 மில்லியனான நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 26 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

### 2.3.2 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனவரி மீதி ரூபா 203,057 ஆக இருந்ததுடன் இந்த நிலுவை ஆதனவரியை அறவிடல் தொடர்பாக 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதி 32 – 42 வரையான விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வாடகை மீதி ரூபா 957,773 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 464,143 தொகை 2009 முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்குரியதாகும்.

(ஆ) கல்கமுவ வாராந்த சந்தையிலிருந்து 2011 ஆம் ஆண்ற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 205,786 தொகை தொடர்பாக வாடகையாளர் மாதாந்தம் ரூபா 5,000 வீதம் செலுத்துவதற்கு 2015 சனவரி 14 ஆந் திகதி நீதிமன்றக் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த பிரகாரம் பணம் செலுத்தாமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 183,786 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) மஹானான்னேரிய வாராந்த சந்தையில் 2011 ஆம் ஆண்டில் ரூபா 30,805 தொகையான நிலுவை வாடகைப்பணம் தொடர்பான வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் 2015 செப்தெம்பர் முதல் மாதாந்தம் ரூபா 6,000 வீதம் செலுத்துவதற்கு வாடகையாளருக்கு விதிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 செப்தெம்பர் மாதம் வரையிலும் ரூபா 6,000 மாத்திரம் அறவிடப்பட்டமையினால் ரூபா 24,805 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் இதற்குத் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கல்கமுவ நகரத்தில் 22 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரையில் அறிவிடவேண்டிய ரூபா 4,744,614 தொகையான முற்கொடுப்பனவுகள் 04 வருட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் உரிய பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கல்கமுவ பொதுச் சந்தையின் முன்பக்கம் நிர்மாணிக்கப்பட்ட தகரத்தினால் செய்யப்பட்ட 05 கடைகள் 2015 யூலை மாதத்தின் போது கேள்வி கோரி வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 03 கடைகளுக்குரிய ரூபா 126,600 தொகையான கேள்விப் பணம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) குருணாகல் - அனுராதபுரம் வீதி மற்றும் சபை எல்லையில் 2016 ஒக்தோபர் 18 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட ‘‘கட்டவுட்’’ மற்றும் பெனர்களுக்காக அறவிடவேண்டிய கட்டணம் ரூபா 103,950 ஆகக் கணிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்தப் பணத்தை அறவிடுவதற்கும் சபை எல்லையில் காணப்பட்ட மேலும் இவ்வாறான விளம்பர அறிவித்தல்களை இனங்கண்டு, பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 21 தொலைத்தொடர்புக் கோபுரங்கள் காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், இக் கோபுரங்களை நிர்மாணிக்கும் போது ஒரு கோபுரத்திற்கு ரூபா 200,000 வீதம் 18 கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம் ரூபா 3,600,000 தொகை மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வருடாந்த தொலைத்தொடர்பு கோபுர வருமானம் ரூபா 54,000 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்க வேண்டிய கடை வாடகை குறித்த திகதியில் அறவிடப்படாமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் திரண்ட நிலுவை கடை வாடகை ரூபா 802,695 ஆக இருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கல்கமவ பேரூந்து நிலையக் கட்டணத்தை அறவிடல், 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 40 சதவீத தரகின் அடிப்படையில் நபரொருவரின் மூலம் அறவிடப்பட்டுக் கொண்டிருந்த போது 2015 ஆண்டில் கேள்வி கோரி அந்த நபருக்கு ரூபா 1,605,750 இற்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சபைக்குக் கிடைக்கப்பெற்ற வருமானம் முறையே ரூபா 689,010 மற்றும் ரூபா 660,000 ஆனமையால் அக்காலத்தில் பாரியளவிலான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2016 ஆம் ஆண்டில் கேள்விகோரும் போது ரூபா 1,300,575 தொகையில் வழங்கப்பட்டிருந்தமையினால் 2015 இன் கேள்வித் தொகை கவனத்தில் கொள்ளப்படாமல் 2016 இல் ஆகக் குறைந்த கேள்வி தீர்மானிக்கப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டில் குறைந்த தொகையொன்று கிடைத்திருந்தது.

(ஆ) சபையில் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற / இடமாற்றலாகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்கள் வைப்புச் செய்த பிணைப்பணம் மற்றும் அதற்குரிய வட்டியுடன் கூட்டுமொத்தமாக ரூபா 13,582 தொகையை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இடமாற்றலாகிச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் செல்லுதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் அறவிடப்படாத ரூபா 23,558 தொகையான ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற சுகாதாரத் தொழிலாளிக்கு 2015 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 150,000 தொகையான இடர் கடன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் 2016 சனவரி முதல் ஒக்தோபர் வரையான காலத்திற்குரிய கடன் தவணைப் பணம் ரூபா 42,207 மற்றும் வட்டி ரூபா 4,642 என்பவற்றை உரிய கடனாளியின் மாதாந்த சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு 2016 ஒக்தோபர் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கல்கமுவ பொதுச் சந்தை மற்றும் பேரூந்து நிலைய கடைகளுக்கும் உரிய மின்சாரப் பட்டியலின் பெறுமதியை கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடும் அடிப்படையில்

மாதாந்த மின்சாரப்பட்டியல் சபையினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 23 கடைகளுக்குரிய மின்சாரப்பட்டியலின் கூட்டுத்தொகையான ரூபா 205,635 இனை கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கல்கமுவ பொதுச் சந்தையில் அமைந்துள்ள கட்டிடம் 8x6 அடி மற்றும் 7x5 அடிகளாக 442 கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு பகுதி மேவுகை செய்யும் வகையில் சில தற்காலிக கடைகளை நடாத்திச் செல்வதன் காரணமாக, சந்தைக்கு உட்பிரவேசிக்கும் இடத்தில் வலது பக்கத்தில் அமைந்துள்ள சில கூறுகள் பாவனைக்கு எடுக்கப்படாமையினால் பெறக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) கல்கமுவ பொதுச் சந்தைக் கட்டிடத்தில் அமைந்துள்ள 442 கூறுகளில் ஒரு சந்தை நாளின் போது ஆகக் குறைந்தது ஒரு கூறிலிருந்து ரூபா 200 வீதம் ரூபா 88,400 வருமானமொன்று கிடைக்க வேண்டியிருந்த போதிலும், 2016 ஒக்தோபர் 18 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது கட்டிடத்தின் உட்பகுதியிலுள்ள கூறுகளிலிருந்து ரூபா 60,140 வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

**3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 04 வாகனங்கள் 1 – 5 வருடங்களுக்கிடையிலான காலத்திலிருந்து விளைவற்ற நிலையில் காணப்பட்டது.

(ஆ) கல்கமுவ பொதுச் சந்தையில் 08 கடைகள் 2016 ஆம் ஆண்டிற்காக பொருத்தமான அடிப்படையில் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்காமையினால் 2017 ஏப்ரல் மாதம் வரையிலும் அந்த ஆதனங்களிலிருந்து எந்தவொரு வருமானமும் சபைக்குக் கிடைத்திருக்கவில்லை.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் முன்மொழியப்பட்ட ரூபா 1,950,000 பெறுமதியான சபையின் 05 வேலைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பீட்டுத் தொகை ரூபா 4,003,286 தொகையான 03 வீதி அபிவிருத்தி வேலைகள் 2017 ஒக்தோபர் மாதம் அளவில் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

i. இந்த மூன்று வேலைகளுக்காகவும் கேள்வி கோரப்படாதிருந்ததுடன் ஒப்பந்தகாரர்களுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து கூறுவிலைகள் பெறப்பட்டிருந்தது. கூறுவிலை கோரும் போது கேள்விதாரருக்கு நியாயமான காலம் வழங்க வேண்டியிருந்த போதிலும், மூன்று நாள் காலம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது அதனால் சரியான போட்டியாளர்களை ஏற்படுத்துவதற்கிருந்த சந்தர்ப்பம் தவறியிருந்ததுடன் மூன்று

வேலைகளுக்காகவும் ஒரு கேள்விதாரர் மூலம் மாத்திரம் கூறு விலை பெறப்பட்டு உரிய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

ii. வேலைகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது கர்ப்களின் கொங்கிரீட்டுக்காக ரூபா 292,186 ஆக இருந்த போதிலும், கர்ப் இற்காக வடிவமைப்புக்களைச் செய்வதற்கு ரூபா 335,988 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது முழு வீதியிலும் கர்ப் ஒரே தடவையில் வடிவங்களைச் செய்வதற்கும் உரிய பலகைகளை ஒரே தடவையில் பயன்படுத்தும் அடிப்படையிலும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தும் ஒப்பந்தகாரால் 20 மீற்றர் 30 மீற்றர் அளவான பகுதியொன்று மாத்திரம் ஒரே தடவையில் வடிவங்கள் செய்யப்பட்டிருந்தமையும் ஒரே பலகை பல தடவைகளில் பயன்படுத்தப்பட்டிருந்தமையும் 2016 ஒக்தோபர் 20 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பாசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

2016 ஆம் ஆண்டின் போது கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 13,408,147 தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் சேதனப் பசளை 3600 தொன் உற்பத்தி செய்யப்பட்டு அந்த உற்பத்தி விற்பனையில் ரூபா 256,544 உழைக்கப்பட்டிருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டின் போது கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை உள்ளடக்கிய சூழலுக்கு இணைவான பணிகள் தொடர்பாக சபைக்கு ‘‘ஹரித்த சம்மான – 2015’’ என்ற விருதும் கிடைத்திருந்தது.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 04 வருமான விடயங்களிலும், 08 செலவின விடயங்களிலும் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே 21 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையிலான அளவில் முரண்கள் காணப்பட்டதுடன் ஓய்வூதியம், ஓய்வூதிய நலன்கள் மற்றும் பணிக்கொடைக்காக ரூபா 679,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டு ரூபா 3,139,445 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் படி 2016 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | கணக்கீடு | நிலையான சொத்துக்கள் பிழையாகக் கணக்கீடு செய்தல். உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியம் மற்றும் வட்டி என்பன பிழையாக கணக்கீடு செய்தமை. பதிவதிலுள்ள வழு. நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்துக் கணக்கீடு செய்தல்.<br><br>வெளிப்படுத்தல் வழுக்கள், நடைமுறைச் சொத்துக்கள் குறைத்துக் கணக்கீடு செய்தல். வருமானம் பிழையாகக் கணக்கீடு செய்தல். பதிவேடுகளுக்கும் பட்டோலைகளுக்குமிடையே வேறுபாடுகள், ஏடுகள் பேணப்படாமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | பெறவேண்டிய நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | சோத்துக்களைப் பயன்பாட்டிற்கு எடுக்கும் போது ஏற்பட்டிருந்த செயற்திறனின்மைகள், செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை. |
| (ஈ) | செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் | வேலைகளுக்காக பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் என்பவற்றில் வழுக்கள் காணப்பட்டமை. |